**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.216/2021**

| Deposition of Name | எழிலரசன் | Prosecution | |
|---|---|---|---|
| Father Name | ஏழுமலை | Defence | DW1 cross |
| Village | ஆத்துக்குடி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 29/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **17.02.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சமூக ஆர்வளராக வேலை செய்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு படித்து முடித்துவிட்டு DCE (பாலிடெக்னிக்) வரை படித்துள்ளேன். இந்த வழக்கு சம்பவ நேரத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் முரளி மற்றும் மணிமாறன் இருந்தார்கள். அதில் முரளி தற்போது உயிருடன் இல்லை. மேற்படி மணிமாறன், முரளி ஆகியோர் விவசாய வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நகல் உண்மை தன்மை அற்றது என்றால் சரியல்ல. அதை பார்க்கும் போது அதில் பெயர் மற்றும் ஊரை தவிர இதர விபரங்கள் தட்டச்சு செய்யப்பட்டு இருப்பது தெரிய வரும் நிலையில் இதிலிருந்தே நான் மேற்படி விபரங்களை இந்த வழக்கிற்காக தன்னிச்சையாக எழுதிக்கொண்டுள்ளது தெரியவருகிறது என்றால் சரியல்ல. வட்டார வளர்ச்சி அலுவலரை விசாரித்தார் உண்மை தன்மை வெளிவரும் என்றால் சரிதான்.

மேற்படி ஆவணத்தை பார்க்கும் போது அந்த ஆவணத்தின் உண்மை நகல் என் வசம் வழங்கப்பட்டு இருக்க வேண்டும் என்பது

தெரிய வருகிறது என்றாலும் அதனால் தான் நகல் என்பது பட்டியலுக்காக அதில் குறிக்கப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு கொடுக்கப்பட்டது இந்த நகல் ஆவணம் தான். நான் தாக்கல் செய்த மேற்படி ஆவணத்தில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி 13.06.2020 ம் அன்று VAO என்னிடம் ஆணையின் நகல் கேட்ட போது நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல மறுநாள் நான் காவல் நிலையத்தில் அருள் என்ற காவலரிடம் கொடுத்தேன்.

அவ்வாறு நான் கொடுத்திருந்தால் போலிசார் என் மீது கொடுக்கப்பட்ட புகாரை Action Drop செய்திருப்பார்கள் என்றாலும் ஆணையை கொடுக்காமல் தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆணையில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அப்படி நான் நிபந்தனைகளை படித்து பார்த்திருந்தால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர் யாரும் குளத்தை அகலப்படுத்த முடியாது. ஒரு குழுவாக செயல்பட்டு தான் அவ்வாறு குளத்தை துார் வார முடியும் என்றால் நாங்கள் குழுவாக தான் சென்றோம். அவ்வாறு குழுவாக சென்றதற்கு நீதிமன்றத்தில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நாங்கள் குழுவாக சென்றிருந்தது உண்மை என்றால் குழுவின் தலைவர் யார்? துணைத்தலைவர் யார், செயலாளர் யார் என்றால் முரளி தான் அந்த குழுவின் தலைவர் ஆவார். குறுக்கு விசாரணையின் தொடக்கத்தில் முரளி விவசாய வேலைதான் செய்து வந்தார் என்று கூறிவிட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆணைப்படி நான் செயல்பட்டிருந்தாலும், ஆணையில் கூறப்பட்டிருந்த நிபந்தனைகளை கடைபிடிக்காமல் தனிநபராக சென்று JCB மூலம் மண் எடுத்ததால் தான் VAO என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் குளங்களை துார்வார அரசு அனுமதி கொடுத்திருந்தால் இதே போலவே 69 குளங்களுக்கும் இந்த ஆணை வழங்கப்பட்டிருக்கும் அது குறித்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் இருந்து விடுதலை பெறும் எண்ணத்தில் போலியாக பொய்யாக ஒரு ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**